10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

75. 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 22-5-1995-ஆம் நாளிட்ட 130-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனைவரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

76. சேலம், திருவாளர்கள் தமிழ்நாடு மாஸ்டர் பிரிண்டர்ஸ் பெடரேஷன் 3-7-1980 முதல் 30-6-1981 வரையிலான காலங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய வரி வித்தியாசத்தினை தள்ளுபடி செய்வது குறித்து வணிகவரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 9-6-1995-ஆம் நாளிட்ட 151-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு, 1971-ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) பிரிவு மற்றும் 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) ஆகிய பிரிவுகளின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

77. 1981-ஆம் ஆண்டு தமிழ்நாடு வடிசாலை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறையின் 30-6-1995-ஆம் நாளிட்ட 91-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1937-ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

78. 1994-95-ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் முப்பத்தேழாவது ஆண்டறிக்கை [1962-ஆம் ஆண்டு சேமிப்புக் கிடங்கு நிறுவனச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 58/1962) 31(11) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

79. 1994-95-ஆம் ஆண்டிற்கான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்தொன்றாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

80. 1994-95ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் இருபத்தொன்றாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

36. பொது கணக்குக் குழுவின் அறிக்கைகள், 1995-96 (இருநூற்று நாற்பத்திரெண்டு முதல் இருநூற்று எண்பத்திரெண்டு வரை).

37. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்திரெண்டாவது அறிக்கை, 1995-96.

38. அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்திமுன்றாவது அறிக்கை, 1995-96.

39. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகள், 1995-96(எண்பத்தாறு முதல் தொண்ணூற்று ஒன்று வரை).

40. 1995-96-ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்).

41. 1995-96ஆம் ஆண்டு கூடுதல் மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

42. 1995-96-ஆம் ஆண்டு இறுதித் துணை மதிப்பீடுகள் குறித்த நிதி அமைச்சர், மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை; (தமிழ், ஆங்கிலம்).